# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024

## வளர்தமிழ் 7

TEDC

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் கஞ்சக்கருவி

அ ) பறை ☐ ஆ ) புல்லாங்குழல் ☐

இ ) கைத்தாளம் ☐ ஈ ) வீணை ☐

2. பயன் கருதாமல் செய்த உதவி ———————— விடப் பெரியது.

அ ) மரத்தை ☐ ஆ ) கடலை ☐

இ ) வயலை ☐ ஈ ) மலையை ☐

3. வள்ளல் என்ற சொல்லின் எதிர்ச்சொல்

அ ) பகைவர் ☐ ஆ ) உலோபி ☐

இ ) நண்பர் ☐ ஈ ) உறவினர் ☐

4. இந்திய தேசிய தீரச் செயலுக்கான பட்டயம் அளித்துப் பாராட்டப்பட்டவன்

அ ) பிரிங்கர் ☐ ஆ ) எடிசன் ☐

இ ) மருதுபாண்டியன் ☐ ஈ ) ஆபிரகாம்லிங்கன் ☐

5. சென்றீர் என்பது

அ ) தன்மை ☐ ஆ ) முன்னிலை ☐

இ ) பன்மை ☐ ஈ ) படர்க்கை ☐

6. ‘ஆறுவது சினம்’ எனக் கூறும் நூல்

அ ) மூதுரை ☐ ஆ ) நாலடியார் ☐

இ ) ஆத்திசூடி ☐ ஈ ) நன்னெறி ☐

TEDC

7. கடும் வரட்சி நிலவியதால் வயல் நிலங்கள் ______________ வெடித்துக் காணப்பட்டன.

அ ) பாளம்பாளமாக ☐ ஆ ) அணிஅணியாக ☐
இ ) படிப்படியாக ☐ ஈ ) ஏற்றஇறக்கமாக ☐

8. அழகுக் கலைகளில் செவிவழியாக உள்ளத்தைக் களிப்பூட்டுவது

அ ) நடனம் ☐ ஆ ) சிற்பம் ☐
இ ) ஓவியம் ☐ ஈ ) இசை ☐

9. செய்து என்ற வினையெச்சத்தின் வினையடி

அ ) செய் ☐ ஆ ) செய்த ☐
இ ) செய்தான் ☐ ஈ ) செய்தல் ☐

10. வள்ளுவர் ______________ என்னும் அதிகாரத்தில் 'சினங்காத்தல்' பற்றிப் பாடியுள்ளார்.

அ ) அன்புடைமை ☐ ஆ ) வெகுளாமை ☐
இ ) கல்வி ☐ ஈ ) கள்ளாமை ☐

11. தடங்கரை என்பதைப் பிரித்தால்

அ ) தடங் + கரை ☐ ஆ ) தடம் + கரை ☐
இ ) தட + கரை ☐ ஈ ) தட + ங்கரை ☐

12. கதிரவனின் அன்புக்குரிய மலர்

அ ) சூரியகாந்தி ☐ ஆ ) மல்லிகை ☐
இ ) தாமரை ☐ ஈ ) முல்லை ☐

TEDC

13. பழனம் என்பதன் பொருள்

அ ) வயல் ☐ ஆ ) வரப்பு ☐

இ ) சேறு ☐ ஈ ) காட்சி ☐

14. தமிழுக்குச் செய்யும் தொண்டாக எண்ணி மோசிகீரனாருக்கு விசிறி வீசிய மன்னன்

அ ) சேரமன்னன் ☐ ஆ ) சோழமன்னன் ☐

இ ) பாண்டியமன்னன் ☐ ஈ ) பல்லவமன்னன் ☐

15. பெரிய புளியங்குளத்தில் கண்டெடுக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகள்

அ ) 45 ☐ ஆ ) 15 ☐

இ ) 25 ☐ ஈ ) 35 ☐

16. இரும்புக் கடப்பாரைக்குப் பிளக்காத பாறை பசுமரத்தின் ____________ ப் பிளக்கும்.

அ ) புல்லுக்கு ☐ ஆ ) வேருக்கு ☐

இ ) தண்டுக்கு ☐ ஈ ) நாருக்கு ☐

17. சேரமானைச் சந்திக்க அதிதொலைவில் இருந்து நடந்து வந்த புலவர்

அ ) பாரதியார் ☐ ஆ ) பாரதிதாசன் ☐

இ ) மோசிகீரனார் ☐ ஈ ) கபிலர் ☐

TEDC

18. நாளை நாங்கள் முதியோர் இல்லம் செல்வோம். இது

அ ) கூற்றுச்சொல்லியம் ☐ ஆ ) வினாச்சொல்லியம் ☐

இ ) மெய்ப்பாட்டுச்சொல்லியம் ☐ ஈ ) ஏவற்சொல்லியம் ☐

19. எல்லாளன் ______________த் தலைநகராகக் கொண்டு 44 ஆண்டுகள் இலங்கையை ஆட்சி செய்தான்.

அ ) கண்டியை ☐ ஆ ) ஆனையிறவை ☐

இ ) யாழ்ப்பாணத்தை ☐ ஈ ) அநுராதபுரத்தை ☐

20. தொடர்ந்து பெய்த மழையினால் குடிசைகள் நீரில் மூழ்கின. மூழ்கின என்பது

அ ) நிகழ்காலம் ☐ ஆ ) எதிர்காலம் ☐

இ ) இறந்தகாலம் ☐ ஈ ) வருங்காலம் ☐

21. இன்றைய கீரிமலையின் முன்னைய பெயர்

அ ) முன்னேச்சுரம் ☐ ஆ ) தம்பலேச்சுரம் ☐

இ ) கோணேச்சுரம் ☐ ஈ ) கேதீச்சுரம் ☐

22. அளவளாவினோம் என்பது

அ ) பலவின்பால் ☐ ஆ ) பலர்பால் ☐

இ ) பெண்பால் ☐ ஈ ) ஆண்பால் ☐

23. பிள்ளைகள் எப்பொழுதும் நற்பண்புகளைப் பேணி நடக்க வேண்டும். இச்சொல்லியத்தின் செயப்படுபொருள்

அ ) பேணி ☐ ஆ ) பிள்ளைகள் ☐

இ ) நற்பண்புகளை ☐ ஈ ) எப்பொழுதும் ☐

TEDC

24. பசுமையான மரங்கள் வீதியின் இருமருங்கிலும் வளர்ந்து நின்றன. இங்கே வந்துள்ள எழுவாய் அடைமொழி

அ ) பசுமையான ☐ ஆ ) மரங்கள் ☐

இ ) வீதி ☐ ஈ ) நின்றன ☐

25. மண் விண் நீர்  தீ காற்று என்பன

அ ) ஐம்பூதங்கள் ☐ ஆ ) ஐம்பொறிகள் ☐

இ ) ஐம்புலன்கள் ☐ ஈ ) ஐம்பால் ☐

26. தமிழின் முதலாவது அகரமுதலி

அ ) சதுர அகராதி ☐ ஆ ) சிலப்பதிகாரம் ☐

இ ) குடும்பவிளக்கு ☐ ஈ ) மணிமேகலை ☐

27. தமிழில் நீர் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்

அ ) கேணி,குளம் ☐ ஆ ) முறிப்பு,வயல் ☐

இ ) வில்,களனி ☐ ஈ ) கட்டு,தரை ☐

28. கொத்துக்கொத்தாக என்பது

அ ) இரட்டைக்கிளவி ☐ ஆ ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

இ ) அடுக்குத்தொடர் ☐ ஈ ) இணைமொழி ☐

29. அரங்கில் ஆடிய சிறுமியை எல்லோரும் பாராட்டினர். இதில் ஆடிய என்பது

அ ) வினையெச்சம் ☐ ஆ ) பெயரெச்சம் ☐

இ ) வினைமுற்று ☐ ஈ ) வினையடி ☐

30. 300 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால்

அ ) முன்னூறு ☐ ஆ ) முந்நூறு ☐

இ ) முன்நூறு ☐ ஈ ) முண்நூறு ☐

TEDC

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

நூல்கள் எமக்கு அறிவைத் தரும் அரிய செல்வங்கள். பிற செல்வங்கள் கள்வரால் களவாடப்படக் கூடியவை. நூல்கள் தரும் அறிவுச்செல்வம் நம்மிடமிருந்து எவராலும் களவாட முடியாதது. இளமைப் பருவத்திலேயே நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் நல்லநல்ல நூல்களைத் தேடித்தேடிக் கற்பதனால் அறிவைப் பெருக்கிக் கொள்ளமுடியும். இதையே ''நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு'' என ஔவையார் கூறியுள்ளார். கல்வி கரையில்லாதது. எனவே நாம் வாழுங் காலத்தில் கரையற்ற கல்வியைக் கற்றுப் பயன்பெறுவோம்.

1. நாம் எப் பழக்கத்தை இளமைப் பருவத்திலேயே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்?

______________________________________________

______________________________________________

2. நம்மிடமிருந்து எவராலும் களவாடமுடியாத செல்வம் எது?

______________________________________________

3. ''நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு'' எனக் கூறியவர் யார்?

______________________________________________

4. எமக்கு அறிவைத் தரும் அரிய செல்வங்கள் எவை?

______________________________________________

5. எப்படி நாம் எமது அறிவைப் பெருக்கிக் கொள்ள முடியும்?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

TEDC

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. எழுவகை ஒலிகளையும் குறிப்பதற்கு நம்முன்னோர் பயன்படுத்திய எழுத்துகள் எவை?

_______________________________________________

2. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகரம் எது?

_______________________________________________

3. நன்னெறிப் பாடலில் சினங்காத்தலுக்கு ஒப்பிடப்படும் செயல் எது?

_______________________________________________

4. பூநகரிப் பகுதியில் எந்தெந்த நாட்டுக்காசுகள் கண்டெடுக்கப்பட்டன?

_______________________________________________

5. ஏழைப் புலவனுக்கு நாடாளும் மன்னன் கவரி வீசியது ஏன்?

_______________________________________________

6. தரப்பட்டுள்ள சொற்களின் பொருளைத் தருக.

புள் _______________________________________

ஒறுப்பு _______________________________________

7. வரம்பிலே வேரில் பழுத்திருந்த பலாக்கனிகளைக் கீறிப்பிளந்தவை எவை?

_______________________________________________

TEDC

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## கதிரவன்

| | | | | |
|---|---|---|---|---|
| தந்திடுவான் | ஒளியை | காலிப்பான் | வையகம் | இருளை |

காலையில் கதிரவன் ________________

உலக ________________ ப் போக்கிடுவான்

பொற்கதிர்கள் நீட்டி எழுந்திடுவான்

கவின்மிகு காட்சி ________________

________________ சிறக்க உதவிடுவான்

உயிர்க்குலம் தழைக்கச் செய்திடுவான்

வண்ண ________________ப் பரப்பிடுவான்

மாந்தர் வாழ வழிசமைத்திடுவான்

TEDC

புள்ளிகள் 05

**5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.**

நான் தாயகத்தில் பென்னம்பெரிய பண்ணை ஒன்றைப் பார்க்கச் சென்றேன். கதிரவன் தகதக என ஒளிவீசிக் கொண்டிருந்தான். அங்கே வரிசைவரிசையாகத் தென்னை மரங்கள் நின்றன. வெள்ளை முயல்கள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தன. பல வண்ணப் பறவைகள் கூண்டுகளில் அடைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்தவாறே இருக்கையில் இருந்து இளநீர் குடித்தேன்.

1. அடுக்குத்தொடர் ஒன்று தருக.

_______________________________________________

2. பலவின்பாற் சொல் ஒன்று தருக.

_______________________________________________

3. எழுவாய் அடைமொழி ஒன்று தருக.

_______________________________________________

4. பன்மை வினைமுற்று ஒன்று தருக.

_______________________________________________

5. இரட்டைக்கிளவி ஒன்று தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் வினைமுற்றுகளில் காலம் காட்டும் இடைநிலைகளைக் கண்டு எழுதுக.**

1. உண்கின்றான் ____________________
2. பாடினர் ____________________
3. செல்வான் ____________________

புள்ளிகள் 03

TEDC

இ. தரப்பட்டுள்ள சொல்லியங்களை இறந்தகாலச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

1. நீர் நிறைந்த குளத்தில் மான்கள் தண்ணீர் குடிக்கின்றன.

______________________________

2. பெற்றோர்கள் பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக ஓடிஓடி உழைக்கின்றனர்.

______________________________

புள்ளிகள் 02

6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மலை | பறவை | அளிக்கின்றன | பரவை | மழை | அழிக்கின்றன |

அது ஓர் அழகான ____________ அடிவாரத்தில் அமைந்த சிற்றூர். அங்கே மரங்கள் பசுமையாகக் காட்சி ____________. மரங்களில் ____________ இனங்கள் கூடுகட்டி வாழ்கின்றன. கிளி ஒன்று இறக்கைகளை விரித்து கீகீ என்று கத்தியவாறு பறக்கின்றது. திடீரென வானம் இருண்டு பெரு____________ பொழிகின்றது. மழை நீர் பெருவெள்ளமாகி ____________ க் கடலை நோக்கிப் பாய்கின்றது.

TEDC

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நான் பள்ளிக்கு நடந்து சென்றேன். நான் வகுப்பறையில் எனது நண்பர்களுடன் சேர்ந்து வீட்டுப் பாடங்களைச் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது ஆசிரியர் வகுப்புக்கு வந்தார். எல்லோரும் வணக்கம் கூறினோம். பின்னர் ஆசிரியர் பாடங்களைக் கற்பிக்கத் தொடங்கினார்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

TEDC

**8) தரப்பட்டுள்ள சொற்களை வைத்து, பழமொழிகளைப் பொருத்தமாக எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| இடுக்கணில் | கொண்டது | படுவர் | கொடியும் | காரியம் |

1. அடாது செய்தவர் படாது ______________________ .

2. பதறாத ______________________ சிதறாது.

3. முதலையும் முருடனும் ______________________ விடா.

4. அடம்பன் ______________________ திரண்டால் மிடுக்கு.

5. இனிய நண்பனை ______________________ அறியலாம்.

புள்ளிகள் 05

TEDC

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ கயிலைவன்னியன
- ✸ இலக்கிய இன்பம்
- ✸ பிறந்தநாள் விழா
- ✸ தாயர் நாள்

புள்ளிகள் 15

TEDC

TEDC